**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் ரூ.1000/–லிருந்து 2000/– ரூபாயாக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.4) துறை**

அரசாணை (நிலை) எண்.132

நாள் 15.11.2021
பிலவ, ஐப்பசி – 29
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.54, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.4) துறை, நாள் 29.06.2012
2. தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம், 2012 (தமிழ்நாடு சட்டம், 15, 2012)
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.45697/2021/ப.ரா–1.1, நாள் 01.09.2021

******

**ஆணை:-**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கிராம ஊராட்சிமன்ற தலைவர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் ரூ.1000 வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களால் 2021–2022–ஆம் நிதியாண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கான மானியக்கோரிக்கையின்போது சட்டப்பேரவையில் கீழ்க்கணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> "ஊரகப் பகுதிகளின் வளர்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். எனவே, அவர்களை மேலும் ஊக்குவிக்கும் விதமாக ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியம் 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்த்தப்படும். "

3. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரிடம் இருந்து கருத்துரு கோரி பெறப்பட்டது. கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சித் தலைவர்கள் அவ்வூராட்சியின் நிர்வாக அலுவலர் என்கிற முறையில் கிராம ஊராட்சியில் நடைபெறும் மாநில அரசு திட்டங்கள் மற்றும் ஒன்றிய அரசு திட்டங்கள் ஆகியவற்றை முழுமையாக செயல்படுத்திடும் முக்கிய பொறுப்பில் உள்ளனர் எனவும். ஊராட்சிகளால் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப் பணிகளான குடிநீர் வழங்குதல், தெருவிளக்குகள் அமைத்து பராமரித்தல், சாலைவசதிகள் ஏற்படுத்துதல், சுகாதாரத்தினை மேம்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன் பிரிவு 82–ல் மேற்கொள்ளப்பட்ட ஊராட்சிகள் திருத்தச் சட்டம் 2012 (தமிழ்நாடு சட்டம் 15/2012)–ன் படி கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியத்தை காலத்திற்கேற்ப அரசு நிர்ணயிக்கும் விகிதத்தில் வழங்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், அரசாணை (நிலை) எண். 54, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 29.06.2012–ன்படி கிராம ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு மாதாந்திர

(த.பி.பா)

மதிப்பூதியமாக ரூ.1,000/- தொடர்புடைய ஊராட்சியின் மாநில நிதிக் குழு மானிய நிதி / பொது நிதியில் இருந்து வழங்கப்பட்டு வருகிறது எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், நிதி ஒதுக்கீடு தொடர்பாக மேற்குறிப்பிட்ட கிராம ஊராட்சி தலைவர்களுக்கான உயர்த்தப்பட்ட மதிப்பூதியத்திற்கு தேவைப்படும் மொத்த நிதியான ரூ.30.06 கோடியை தொடர்புடைய கிராம ஊராட்சியின் மாநில நிதிக் குழு மானிய நிதியிலிருந்தோ அல்லது கிராம ஊராட்சியின் சொந்த வருவாயில் இருந்தோ கிராம ஊராட்சி ஒன்றுக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.24,000/- (ரூபாய் இருபத்து நான்கு ஆயிரம் மட்டும்) வீதம் மேற்கொள்ள அனுமதிக்கலாம் எனவும், இவ்வரசாணை தனி அலுவலர்கள் பொறுப்பு வகிக்கும் கிராம ஊராட்சிகளுக்குப் பொருந்தாது என்றும், உயர்த்தப்படும் மதிப்பூதியத் தொகை இவ்வரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் எனவும், கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான மதிப்பூதியத்தை நிர்ணயம் செய்வதற்கான அதிகாரத்தை அரசுக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 அதன் பிரிவு 82-ன் கீழ் வழங்கியுள்ளதால், கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான மாதாந்திர மதிப்பூதியத்தை ரூ.1000-லிருந்து ரூ.2000/-(ரூபாய் இரண்டு ஆயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கிட அரசாணை வெளியிடுமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு மதிப்பூதியத் தொகையினை ரூ.1000/- லிருந்து ரூ.2000/- ஆக உயர்த்தி வழங்க கீழே குறிப்பிட்டுள்ளவாறு ரூ.30.06 கோடி (ரூபாய் முப்பது கோடியே ஆறு லட்சம்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| மொத்த கிராம ஊராட்சித் தலைவர்களின் எண்ணிக்கை | : | 12,525 |
| உயர்த்தி வழங்கப்படவுள்ள மாதாந்திர மதிப்பூதியம் (ரூபாயில்) | : | 2,000 |
| ஒரு கிராம ஊராட்சித் தலைவருக்கான ஒரு வருடத்திற்கான மதிப்பூதியம் (ரூபாயில்) ரூ.2000 X 12 மாதங்கள் | : | 24,000 |
| மொத்த ஊராட்சித் தலைவர்களுக்கான ஓராண்டுக்கான மொத்த மதிப்பூதியம்: 12525 கிராம ஊராட்சித் தலைவர்கள் X ரூ 2000 X 12 மாதங்கள். | : | ரூ.30,06,00,000<br>(ரூ.30.06 கோடி) |

மேற்கண்ட செலவினத்தை தொடர்புடைய கிராம ஊராட்சியின் மாநில நிதிக் குழு மானிய நிதியிலிருந்தோ அல்லது கிராம ஊராட்சியின் சொந்த வருவாயில் இருந்தோ மேற்கொள்ள அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது. மேலும் இம்மதிப்பூதியம் தனி அலுவலர்கள் பொறுப்பு வகிக்கும் கிராம ஊராட்சிகளுக்கு பொருந்தாது.

6. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தை உரிய வழிமுறைகளின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்பு வாரியாக, மாவட்ட வாரியாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் அளிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிப்பு செய்ய வேண்டும்.

7. மேலே, பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையினை பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதல் ஊராட்சிமன்ற தலைவர்களுக்கு மதிப்பூதிய தொகை உயர்த்தி வழங்கப்படும்.

9. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.48523/Fin(RD)/2021, நாள் 02.11.2021 பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ. அமுதா**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்.
அனைத்து மாவட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
சம்பளக் கணக்கு அலுவலர்(தெற்கு), சென்னை-35,
அனைத்து மாவட்ட ஊராட்சிகள் / வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கருவூலங்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்-III, சென்னை-9
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை)அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
அரசு தலைமைச் செயலாளரின் முதன்மைத் தனிச்செயலாளர், சென்னை-9
நிதி(ஊரக வளர்ச்சி)/சட்டத் துறை, சென்னை-9,
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மைத் தனிச் செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.1,பரா.2, பரா.3 மற்றும் வ.செ.(ம) ஒ.துறை,
இருப்பு கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்